**O.S.No.254/2009**

**Date:14.08.2018**

வாதி தரப்பு சாட்சி 3 – நாகராஜன், த–பெ.சுப்பிரமணியன்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

13ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு ரியல் எஸ்டேட் தொழில் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிகளுக்கு நான் சித்தப்பா உறவு முறை என்றால் சரியல்ல. நான் அவர்களுக்க சித்தப்பா உறவு முறை வேண்டும் என்றாலும், நான் வழக்கிற்காக மறுப்பு தெரிவிக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் சாட்சியத்தில் கிருஷ்ணன், பலராமன் கோவில் என்பது இஸ்கான் கோவில் என்று அழைக்கப்படும் என்றால் சரிதான். அந்த கோவில் தங்கமயில் ஜுவல்லரி நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். அந்த கோவிலுக்கு வழக்கமாக செல்வது வழக்கம் என்றால் சரிதான். மேலும் அதில் உள்ள குழுவில் நானும் ஒரு உறுப்பினர் என்றால் சரிதான். கோவில் கட்டி திறப்பு விழா நடத்தி ஐந்து வருடம் இருக்குமா என்றால் 10 ஆண்டுகள் இருக்கும். அந்த கோவில் கட்டப்பட்டு, திறப்பு விழா செய்யப்பட்டு சுமார் 5 முதல் 6 வருடங்கள்தான் இருக்கும் என்றாலும், நான் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சி சொல்வதால் 10, 12 வருடங்கள் இருக்கும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதிகள் என்ன கோரிக்கை வைத்துள்ளனர் மற்றும் பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். வாதிகள் கேட்டுக் கொண்டதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றாலும் சரிதான். தாவாச் சொத்து சம்பந்தமாக 11 முதல் 13 பிரதிவாதிகளிடம் சமரச பேச்சு வார்த்தை நடத்த நான் சந்தித்தேன் என்றால் சரியல்ல. வழக்கு விஷயமாக நான் 11 முதல் 13 பிரதிவாதிகளை சமரசத்திற்காக மூன்று மாதங்களுக்கு முன்பாக பேசினேன் என்றாலும், அதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அந்த சமரசம் தோல்வியடைந்ததால்தான் பிரதிவாதிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து என்ன சர்வே எண்ணில் உள்ளது என்றால் தெரியாது. மொத்தச் சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தெரியும். எனக்கு சொத்தைப் பற்றி நான்குமால் உட்பட எந்த விபரமும் தெரியாது என்றாலும், சொத்தைப் பற்றி தெரியும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்து

வாதிகளுக்குப் பாத்தியப்படடது என்றும், தாவாச் சொத்தின் தென்புற மாலாக பிரதான மதுரை சாலை அமைந்துள்ளதாகவும், மேற்படி சொத்தை சுற்றி அமைந்துள்ள கடைகள், தெருக்கள் அமைந்துள்ளது பற்றியும் எனக்கு எந்த விபரமும் நேரடியாக தெரியாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவாச் சொத்திற்கு வடக்கே அமரன் வகையறா வீடும், கிழக்குப் பக்கம் காலியிடம் இருப்பதாகவும் வாதிகள் சொன்னபடி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கோவிலுக்கு சென்று வரும்போது வாதிகள் சொத்தை அனுபவித்து வந்ததாகவும், அதை நான் நேரடியாக பார்த்து வந்ததாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்களை வாதிகள் அனுபவிப்பதாகவும், அதை சுற்றி வேலி அமைத்துள்ளதாகவும் நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தை சுற்றி வேலி அமைத்து 12 ஆண்டுகள் ஆகிவிட்டதாகவும், வேலி அமைப்பதற்கு நான் உதவியாக இருந்ததாகவும் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் உரிமை கோரியுள்ள தாவாச் சொத்து அவர்கள் வசம்தான் உள்ளத என்றாலும், அவர்கள் அனுபவத்தில் உள்ளது என்றாலும், அந்த விபரஙக்ள் தெரிந்து கொண்டு வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்துக்கள் சம்பந்தமாக எந்த விபரமும் தெரியாமல், மேற்படி சொத்துக்கள் வாதிகளுக்குப் பாத்தியம் என்று பொய்யாக சாடசியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. தாவாச் சொத்துக்களில் வாதிகளுக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது என்றாலும், மேற்படி சொத்துக்கள் 12, 13 பிரதிவாதிகளுக்கும் மற்றும் 13ம் பிரதிவாதியின் சகோதரர் சந்திவீரன் ஆகியோருக்கு பாத்தியப்பட்டவை என்றாலும், அதில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், இந்த விபரங்கள் தெரிந்து கொண்டு வழக்கிற்காகவும், வாதிகளுக்கு ஆதரவாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதிகளின் நெருங்கிய உறவினர் என்பதால் என் சாட்சியம் பொய் சாட்சியம் என்றாலும், என் சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றாலும் சரியல்ல.

(11, 12 பிரதிவாதிகள் தரப்பில் 13ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)